# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.51 (L.W.75)

| | |
|---|---|
| Name | Govindhasamy |
| Father/Husband Name | K.Solai |
| Calling/Occupation | காவல் துணைக்கண்காணிப்பாளர் |
| Age | 55 |
| Address | No.1, TNHP, Quarters, T.V.Malai. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.04.2025.

( A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.46 P.M.**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் மாவட்ட குற்றப்பிரிவு II-ல் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.06.2015-ம் தேதி வேப்பங்குப்பம் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று இரவு சுமார் 08.30 மணிக்கு ஆம்பூர் காவல் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களின் VHF மூலம் ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வர சொல்லி தகவல் கொடுத்ததின் பேரில் நான் அங்கு சுமார் இரவு 09.00 மணியளவில் சென்றபோது ஆம்பூர் நகர காவல்

நிலையத்தின் எதிரே முஸ்லீம் மக்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். அப்போது K.M.அலி அக்பர் என்பவர் ஆம்பூர் காவல் துணைக்கண்காணிப்பாளரை பார்த்து நான் இப்போது ஷமீல் பாஷா இறந்தது தொடர்பாக மனு கொடுக்கிறேன் என்று சொன்னார். காவல் துணைக்கண்காணிப்பாளர் அலி அக்பரை பார்த்து பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் சென்று புகார் அளியுங்கள் என்று கூறினார். உடனே என்னை பார்த்து காவல் துணைக்கண்காணிப்பாளர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்று ஆஜராகும்படி என்னிடம் கூறினார்.

மேலும் டிஎஸ்பி அவர்கள் புகார் மனு கொடுப்பார்கள் அந்த புகார் மனு பெற்று வழக்கு பதிவு செய்யுமாறு வாய்மொழியாக கூறியதின் பேரில் நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்று இரவு சுமார் 10.00 மணிக்கு ஆஜரில் இருந்தேன்.

27.06.2015 அன்று சுமார் 00.15 மணிக்கு K.M.அலி அக்பர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 பிரிவு 176 கு.வி.மு.ச.–ன்படி பொறுப்பு காவல் ஆய்வாளராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். K.M.அலி அக்பர் கொடுத்த புகார் மனு ஏற்கனவே அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.79.

பின்பு முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் மற்றும் புகார் மனுவை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு இரவு சுமார் 02.00 மணியளவில் அனுப்பி வைத்தேன்.

பின்பு மேற்படி குற்ற வழக்கின் சம்பந்தமாக பள்ளிக்கொண்டா காவல் நிலைய்திலும் சாட்சிகள் விஜயகுமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் 27.06.2015 அன்று விடியற்காலை 05.30 மணிக்கு சம்பவ இடமான பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் பதிவு செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.80. நான் தயார் செய்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

27.06.2015 அன்று காலை சுமார் 10.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்ய நீதிமன்ற நடுவரை நியமிக்கக்கோரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன்.

அதன் அடிப்படையில் மேற்படி குற்ற வழக்கின் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் வேலூர் குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.1 பொறுப்பு நீதித்துறை நடுவர் எண்.5 அவர்களுக்கு கனம் ஐயா மும்மூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது.

27.06.2015 அன்று காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை இவ்வழக்கின் சாட்சிகளான K.M.அலி அக்பர், N.K.கௌஷ் பாஷா, ஷாஜகான், பரிதா பேகம், ஹுமாயூன், ரகுமான், சாதிக் பாஷா, பாஷா, விஜயகுமார் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

27.06.2015 அன்று பகல் 13.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரது பிரேதத்தை பிரேத விசாரணைக்கு அடையாளம் காட்டி ஆஜர் செய்யவும் மற்றும் பிரேத பரிசோதனைக்கு மருத்துவரிடம் ஷமீல் பாஷா பிரேதத்தை அடையாளம் காட்டி ஆஜர் செய்யவும் அலுவலாக த.கா.257 திரு.அனுமந்தன் என்பவரை நியமித்து சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

அன்று இரவே சுமார் 22.00 மணிக்கு த.கா.257 திரு. அனுமந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.06.2015ம் தேதி த.கா.257 திரு. அனுமந்தன் என்பவர் பிரேத பரிசோதனையின்போது மருத்துவரால் ஒப்படைக்கப்பட்ட ஷமீல் பாஷா பிரேதத்திலிருந்து மாதிரிக்கு எடுக்கப்பட்ட ஆறு கண்ணாடி குவளை சீல் வைத்ததை வேலூர் வட்டார தடய ஆய்வகத்தில் ஒப்படைத்தார்.

01.07.2015–ம் தேதி த.கா.257 திரு. அனுமந்தன் என்பவர் பிரேத பரிசோதனையின்போது ஷமீல் பாஷா பிரேதத்தின் மீது இருந்த ஆடைகளான வெள்ளை நிறத்தில் கரும்புள்ளி போட்ட சிவப்பு கருப்பு புளூ நிற கோடு போட்ட டிரவுசர் –1ம், வெள்ளை மற்றும் கருப்பு பூ போட்ட பெட்சீட்–1ம் என்னிடம் ஆஜர் செய்ததை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.81.

மேற்படி அ.த.சா.ஆ.81 ல் சொல்லப்பட்டுள்ள பொருட்கள் இதுவரை இந்த நீதிமன்றத்திற்கு தராததால் அதை தற்போது குறியிட இயலவில்லை. பின்னிட்டு அது குறியிடப்படும்.

பின்பு 01.07.2015 அன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாக்குமூலர்களான கே.எம். அலி அக்பர், N.K.கௌஷ் பாஷா, ஷாஜகான், திருமதி. பரிதா பேகம், அலி ஹுமாயூன், ரகுமான், பாஷா, சாதிக் பாஷா, விஜயகுமார், கார்த்திகேயன், அனுமந்தன் ஆகியோரது வாக்குமூலங்களின் உண்மை நகலையும் 19.06.2015–ம் தேதி ஷமீல் பாஷா வயது 26 த/பெ ஷாஜகான், பூந்தோட்டம், ஆம்பூர் என்பவரை பயின்ட் ஓவர் செய்த நகல் மற்றும் இவ்வழக்கின் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் மற்றும் ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் கொடுக்கப்பட்ட புகார் மனு K.M.அலி அக்பர், என்.கே.கௌஷ் பாஷா ஆகியோரது புகார் மனுக்களின் உண்மை நகலை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

ஷமீல் பாஷா வயது 26 த/பெ ஷாஜகான், பூந்தோட்டம் ஆம்பூர் கொடுத்த வாக்குமூலம் மற்றும் கௌஷ் பாஷா கொடுத்த புகார் மனுவையும் நீதித்துறை நடுவர் எண்.1க்கு அனுப்பி வைத்தேன். நான் அனுப்பிக்கொண்ட மேற்படி ஆவணங்கள் அ.த.சா.ஆ.82. அதில் மொத்தம் 19 தாள்கள் உள்ளன. கௌஷ் பாஷா கொடுத்த புகார் ஏற்கனவே அ.ம.சா.ஆ.2 ஆக குறியிடப்பட்டுள்ளது.

பின்பு 01.07.2015 அன்று டிஜிபி ஆர்டர் மற்றும் எடிஜிபி சிபிசிஐடி அவர்களின் உத்தரவுப்படி பகல் 12.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 பிரிவு 176 கு.வி.மு.ச வழக்கில் கண்ட அனைத்து ஆவணங்களையும் வேலூர் சிபிசிஐடி காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொது நமுனா மூலம் பக்க எண் 1 முதல் 140–ஐ கொண்ட ஆவணங்களை நேரில் ஒப்படைத்தேன்.

அன்றைய தினமே இரவு 22.00 மணிக்கு வேலூர் சிபிசிஐடி காவல் ஆய்வாளர் திரு. கருணாநிதி அவர்களிடம் சுமார் Sl.No.1 to 12 வரை உள்ள பள்ளிக்கொண்டா காவல் நிலைய பதிவேடுகளை அசல் ஆவணங்களாக சாட்சிகள் த.கா.345 திரு. பரத் மற்றும் த.கா.362 திரு.நந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் ஒப்படைத்தேன். அதனை சிபிசிஐடி காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக்கொண்டார். அதில் நானும், பரத், நந்தக்குமார் மற்றும் கருணாநிதி சிபிசிஐடி ஆய்வாளர் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.26 ஆக குறியிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் 27 முதல் 38 வரை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிறகு 19.04.2016 அன்று வேலூர் சிபிசிஐடி காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சந்திர சேகரன் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

மேற்படி அ.த.சா.ஆ.81 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு பொருட்கள் இந்த நீதிமன்ற வழக்கு சொத்தாக இன்னும் பெறப்படாததால் அந்த பொருட்களை உரிய முறையில் வரவழைத்து குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை 04.04.2025–க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.48 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.02 19:52:50 +0530